# முதல்வரின் அறிவுறுத்தலின்படி 50 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு–

# ரூ.10 இலட்சம் கோடி முதலீடு என்ற இலக்கை நோக்கி நடைபோடும் தொழில்துறை!

## சட்டப்பேரவையில் தொழில்துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் – முனைவர் டி.ஆர்.பி. ராஜா பெருமிதம்!

**சென்னை, ஏப்.28-**

**சட்டப்பேரவையில் தொழில் துறை மானியக் கோரிக்கை பதிலுரையில் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா முதல்வரின் அறிவுறுத்தலின்படி 50 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு, 10 இலட்சம் கோடி முதலீடு என்ற இலக்கை நோக்கி நடைபோடுகிறது தொழில் துறை என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

சட்டப்பேரவையில் தொழில் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா பதிலுரை வருமாறு :-

நவீனத் தமிழ்நாட்டின் சிற்பியாக நமது மாநிலத்தின் தொழில் வளத்தை கட்டமைத்தவரும், தமிழாகவே வாழ்ந்து உலகத் தமிழர்களின் நெஞ்சங்களிளெல்லாம் நிறைந்தவரும், எனக்கு அரசியல் பயிற்சி தந்து ஆளாக்கியவருமான அருமைத் தாத்தா முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாபெரும் தலைவரின் கொள்கை வாரிசாக, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இந்த முக்கால்

### தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு கருவியாகவே தொழில் துறையை பார்க்கிறார் முதல்வர்!

நூற்றாண்டு இயக்கத்தை இரும்புக் கோட்டையாக கட்டிக் காக்கும் கழகத் தலைவர் இந்தியாவிலேயே வளர்ச்சிப் பெற்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கும் திராவிட நாயகன், மாநில உரிமைகளின் காவலர், இந்திய ஜனநாயகத்தைக் காக்கும் சட்டப்போரின் தளபதி, அன்றாடம் எங்களுக்கு ஆலோசனை வழங்கி, ஒவ்வொரு நொடியும் அக்கறை செலுத்தி, தன்னைப் போலவே ஓயாமல் உழைக்கின்ற பயிற்சியை அளித்து, பொது வாழ்வில் ஏற்படும் இன்னல்களால் நாங்கள் சோர்வடையும்போதெல்லாம் தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்தி, உயர்த்தி விடும் எங்கள் குடும்பத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டின் எதிர்கால நம்பிக்கையும், சொல்லை வில்லாக்கி, கருத்துகணைகளை ஏவுவதில் தன் தாத்தாவைப் போலவும், எடுத்ததை முடித்து எதிரிகளின் சூழ்ச்சிகளை தவிடு பொடியாக்குவதில் தன் தந்தையைப் போலவும் செயலாற்றி, எனக்கு எந்நாளும் வழிகாட்டுகின்ற மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீண்ட அரசியல் பயணத்தில் என் தந்தைக்கு அண்ணனாக இருந்து, என்மீது அன்பு கொண்டு, அரவணைத்து, வரவேற்கின்ற கழக பொதுச் செயலாளர், அவை முன்னவர் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வணங்குகிறேன். தோற்றத்திலும், பண்பிலும் உயர்ந்து நின்று பேரவையின் மாண்பைக் காக்கும் பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கும் எனது வணக்கம். தங்களுக்கு என் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை, நேற்றே அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களைப் பேச வைத்து இருக்கலாம், இன்றைக்கு மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைப் பேச வைத்து, அவர் பேசிய பிறகு என்னையெல்லாம் பேச விடுகிறீர்கள். ஆனால் பேச்சு வருமோ இல்லையோ, நிச்சயமாக வீச்சு வரும்திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டனுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனவே களத்தில் அந்தப் பணியை நிச்சயமாக நாங்கள் காட்டுவோம் என்று உறுதி அளிக்கிறேன்.

திராவிட மாடலின் நல் ஆட்சிக்கு துணை நிற்கும் தோழமைக் கட்சிகளின் உறுப்பினர்களுக்கும், ஜனநாயகத்தின் மறுபக்கமாக எதிர்க்கட்சியை சார்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழில் துறை அமைச்சராக செயல்படுவதற்கு, அடித்தளமாக சட்டமன்ற உறுப்பினர் எனும் இந்தத் தகுதியைத் தொடர்ந்து மூன்றாவது முறையாக எனக்கு வாய்ப்பு வழங்கி, என்னை தங்கள் வீட்டுப் பிள்ளையாகவும் கருதுகின்ற எனது பெருமை வாய்ந்த மன்னார்குடி தொகுதி மக்களுக்கும், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் அவர்களுக்கும், மன்னார்குடி தொகுதி, அனைத்து ஒன்றிய, நகர, கழகச் செயலாளர்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும் மற்றும் அனைத்து உடன்பிறப்புகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வடக்கை தெற்கு பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த அண்ணா!**

என் பேச்சில் தொடக்கத்தில் actual ஆக புறநானூற்று கவிதை ஒன்று சொல்லலாம் என்று நினைத்தோம். அப்புறம் என்னுடைய team-இடம் பேசிக்கொண்டிருந்தேன். இவையெல்லாம் நமக்கு வராது. இந்தச் சட்டமன்றத்தில் ஒருவர், அவர் தங்கம் தென்னரசு அவர்கள் மட்டும்தான் இருக்கவேண்டும். அவரால் மட்டும்தான் இதுவெல்லாம் செய்யமுடியும் என்று கூறினார்கள். (சிரிப்பு) அதை விடுத்துவிட்டு, நேரடியாக பேரவைத் தலைவர் அவர்களே, வடக்கை, தெற்கின் பக்கம் திரும்பி பார்க்கவைத்த, பேரறிஞர் அண்ணா அவர்கள் 22-2-1959 தனது Homeland இதழின் துணைத் தலையங்கத்தில் இவ்வாறு கூறினார். “It is an economic tenet, pure and simple, there should not be concentration of industries in a particular region alone; Industries ought to be spread out, if not there would be imbalance.” அதாவது தொழில்கள் ஒரு பகுதியில் மட்டும் குவிய கூடாது, அவை சமமாக பரவ வேண்டும். இல்லையெனில் சமநிலை இழப்பு தவிர்க்க இயலாததாக ஆகிவிடும் என்று கூறுகிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் இந்த தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில் நவீன தமிழ்நாட்டை நடத்தும் திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் தான் நம் தமிழ்நாடு பரவலாக்கப்பட்ட வளர்ச்சியைப் பெற்று, நாட்டிலேயே தொழில் வளர்ச்சியிலும், தொழிலாளர் நலனிலும் முதன்மை மாநிலமாக வானுயர (மேசையைத் தட்டும் ஒலி) இன்று நிற்கிறது. மற்ற மாநிலங்களெல்லாம் தொழில் முனைவோர்களை மட்டுமே தேடிப்போவார்கள், ஆனால் நமது திராவிட நாயகர் மட்டும்தான், இந்த முதலீட்டின்மூலம் எந்தெந்தப் பகுதிக்கு வளர்ச்சி கிடைக்கும், யார், யாருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், சமுதாயத்தில் யார் உயருவார்கள், ஏற்றத்தாழ்வுகளை எப்படி இந்த முதலீடுகள் கிடைக்கும் என்பதையெல்லாம் சிந்தித்து, அவர் செயல்படுகிறார். தொழில் துறையை தமிழ்நாட்டிற்கு வருமானம் சம்பாதிக்கும் ஒரு துறையாக மட்டும் அவர் பார்ப்பது இல்லை. ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் ஒரு கருவியாகவேதான் அவர்களை பார்க்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால்தான், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மனதிற்கும் மிகுந்த நெருங்கிய இந்தத் துறையாக இது இருப்பதினால்தான், அவரை அலங்கரித்த மேடைகளிலேயே அதிகமான மேடைகள் தொழில் துறையின் மேடைகளாகத்தான் அமைந்திருக்கின்றன.

**ரூ.10 இலட்சம் கோடி இலக்கு! 50 லட்சம் பேருக்கு வேலை!**

கடந்த செப்டம்பர் மாதம் முதலமைச்சர் அவர்கள் Guidance நிறுவனத்திற்கு வந்திருந்தார். அங்கே ஒரு பெரிய 15 அடி board-ல் 10 இலட்சம் கோடி ரூபாய் இலக்கை எட்டிவிட்டோம் என்று நாங்கள் பெருமையாக மார்தட்டிக் கொண்டிருந்தோம். அப்போது ஒரு பேனாவை எடுத்த அவர், அங்கே சிறிதாக ‘50 இலட்சம் வேலைவாய்ப்புகள் நமது இலக்கு’ என்று ஒரு சிறிய பேனாவில் 15 cm-ல் எழுதிவிட்டு சொன்னார், முதலமைச்சர் அவர்கள். அந்த 15 அடி உயரத்தில் பெரியதாக இருக்கும் board-ல் 10 இலட்சம் கோடி ரூபாய் இலக்கு எங்களுக்கு பெரியதாக தெரியவில்லை. அந்த 15 cm-ல் எங்கள் முதலமைச்சர் அவர்கள் எழுதி வைத்துவிட்டு சென்ற அந்த 50 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பை உறுதி செய்யவேண்டிய கடமையை நோக்கி இந்தத் துறை



செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுவே இந்தத் துறையில் இலக்காக மாறியுள்ளது. பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களின் இந்த One trillion US dollar economy என்ற இலக்கை அடைய தமிழகத்தில் அனைத்துத் துறைகளும் இணைந்து செயல்பட வேண்டும்.

அதில் தொழில் துறை முக்கிய பங்காற்றும். இந்த நோக்கத்துடன்தான் அனுதினமும் இந்த இலக்கை நோக்கி தொடர்ந்து நம் தொழில் துறையின் entire team, இந்தச் செயல்பாடுகள் தான் சமீபத்தில் ஒன்றிய அரசின் புள்ளியியல் துறையால் வெளியிடப்பட்ட இந்திய அளவிலான பொருளாதார வளர்ச்சி குறியீட்டில், ஒன்றிய அரசின் பல்வேறு இடையூறுகளுக்கு இடையேயும் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் பின் தள்ளிவிட்டு 9.69 விழுக்காடு என்கிற வரலாற்று சிறப்புமிக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்து, இந்த நாட்டின் முதன்மை மாநிலமாக கம்பீரமாக உயர்ந்து நிற்கிறது நமது தமிழ்நாடு. (மேசையைத் தட்டும் ஒலி)

திராவிட மாடல் ஆட்சியில், நிதித் துறை அமைச்சர், எனது அருமை அண்ணன், தங்கம் தென்னரசு அவர்கள், தொழில் துறையின் நான்கு ஆண்டுகால சாதனைகளில் எனக்கு மக்கத்தான அடித்தளம் அமைத்துத் தந்துள்ளார்கள். இந்நேரத்தில் அவர்களுக்கு எனது special நன்றியை நிச்சயமாக நான் தெரிவிக்க வேண்டும். முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால்தான் தமிழ்நாட்டில் தொழில்

### 27.74 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்டு உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம்!

வளமும், முதலீடுகளின் தரமும், எண்ணிக்கையும் மளமளவென உயர்ந்து வருகிறது.

Annual Survey of Industries, 2022-2023 அறிக்கையின்படி 27.74 இலட்சம் தொழிலாளர்கள்கொண்டு உற்பத்தித் துறையில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் number 1-ஆக இன்றைக்குத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான், NASSCOM data-படி உலகளாவிய திறன் மையங்களில், GCCs-ல் கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும் 94,121 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இதன்மூலம் இந்திய அளவில் உயர்தர வேலை வாய்ப்புகள் வழங்கும் முதல் இடத்தில் தமிழ்நாடுதான் இன்று இருந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு, உற்பத்தி மற்றும் சேவை இரண்டிலும் number 1 மாநிலமாகத் திகழ்கிறது. அனைத்து மாநிலங்களிலும் இவ்வாறு இருக்காது.

உதாரணமாக, தெலங்கானாவை எடுத்துக்கொண்டால், அவர்கள் சேவைத் துறையில் இருப்பார்கள், கர்நாடகாவை எடுத்துக்கொண்டால், சேவைத் துறையில் இருப்பார்கள், மகாராஷ்டிராவைப் பார்த்தால் அவர்கள் உற்பத்தித் துறையில் இருப்பார்கள், குஜராத், உற்பத்தித் துறையில் இருக்கும்.

ஆனால், உற்பத்தி மற்றும் சேவை இரண்டையும் சரிசமமாக செய்வது தமிழ்நாடுதான். எனவேதான், இதை Columbia, Yale, John Hopkins போன்ற உலக புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் உள்ள அரசியல் மற்றும் சமூகவியல் துறைகளில் பேராசிரியராக இருக்கும் Prof. Christophe Jaffrelot அவர்கள், சமீபத்திய The Wire ஊடகத்துக்கு அளித்த interview-ல் “It is interesting to see that if there is a model that is to be followed in India today, it is Tamil Nadu. Here is a State that has almost eradicated poverty, industrialised at a high pace and where services are taking over from industry” என்று சொல்லியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

பொருளாதார வளர்ச்சியில் இன்று இந்தியாவிற்காக ஒரு model இருக்க வேண்டுமென்றால் அது தமிழ்நாடு model-ஆகத்தான் இருக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிபுணர் கூறுகிறார் என்றால், அது தான் இந்த திராவிடமாடல் ஆட்சிக்கு, நமது திராவிட நாயகன் அவர்களின் உழைப்புக்குக் கிடைத்த ஒரு மிகப்பெரிய சான்றாகும். சேவை மற்றும் உற்பத்தி இரண்டிலும் தொழில் துறை மிகப் பெரிய பாய்ச்சலோடு பாய்ந்து வருகிறது.

உலகமே வியந்து பார்க்கும் இந்த வளர்ச்சி எப்படி கிடைத்தது என்று நாம் பார்க்க வேண்டும். கடந்த 2016 முதல் 2021 வரையிலான ஐந்து ஆண்டுகளில் இருந்த negative sentiments அனைத்தும் உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் governance மட்டுமே சொல்லவில்லை, COVID கூட இருந்தது. அதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். COVID-ஐ சேர்ந்த அந்த negative sentiments-ஐ எல்லாம் நீக்கி அதை positive ஆக மாற்றுவதே ஒரு மிகப்பெரிய வேலை. அதை positive ஆக உருவாக்கி ஒரு phoenix பறவைப்போல் தமிழ்நாட்டை மீண்டெழச் செய்திருக்கிறார் நம்முடைய திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலில் தமிழகத்தில் ஒரு நிலையான, உறுதியான ஆட்சி அமைந்தது. முதலமைச்சர் அவர்களின் திறன்மீது முதலீட்டாளர்களுக்கு மிகப்பெரிய நம்பிக்கை வந்தது. அதேபோல், ஆட்சி அமைந்தவுடன் முதலமைச்சர் அவர்களின் கொள்கைகளைப் புரிந்துகொண்ட உலக முதலீட்டாளர்கள் மனதில் தமிழகத்தின் மீதான அவர்களின் பார்வை சாதகமாக மாறியது. ஏனெனில், முன்பு இருந்தது ஒரு unsettling times. முதலீட்டாளர்களுக்கு தமிழகத்தின்மீது மீண்டும் நம்பிக்கை பிறந்தது. முதலீட்டாளர்களாக, முதற்கட்டமாக உலகத்தின் சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஒரு பொருளாதார ஆலோசனைக் குழுவை முதலமைச்சர் அவர்கள் அமைத்தார். பல்வேறு முதலீட்டாளர்கள் சந்திப்புகளை நடத்தி பணிகளை முடிக்கிவிட்டார். முதலமைச்சர் அவர்கள், 2021 முதல் 2023 வரையிலான இந்த மூன்று வருடங்களில் ஐந்து mini Investment Conclaves நடத்தினார்கள். இவ்வாறு, 2023 ஆம் ஆண்டு வரை, ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டரை ஆண்டுகளில் 2 இலட்சத்து 97 ஆயிரம் கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்த்தார் நம்முடைய திராவிட நாயகன் அவர்கள்.

முதன் முறையாக அருமை அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களை, அப்போதுதான் Davos-க்கு அனுப்பி வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.

நான் Davos பற்றி பேசும்போது ஒரு சில விஷயங்களை மட்டும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். Davos-க்கு சென்றீர்கள். அங்கு என்ன ஆயிற்று? ஏன் அங்கிருந்து முதலீடுகள் வரவில்லை? முதலீடுகள், மகாராஷ்டிராவிற்கு போனது, தெலுங்கானாவிற்கு போனது என்றெல்லாம் சொன்னீர்கள். மகாராஷ்டிரா எப்படிபட்ட முதலீடுகளையெல்லாம் ஈர்த்தது. Davos என்றால் என்ன என்று தெரியாவதர்கள் பேசும் பேச்சு இது. Davos-க்கு பல நாடுகளிலிருந்தும் வரும் முதலீட்டார்களை யெல்லாம், மிகப் பெரிய ஜாம்பவான்களெல்லாம் வந்து குழுமுகிறார்கள். So, நீங்கள் உலகம் முழுவதும் முதலீடுகளை ஈர்க்க போவதற்கு பதிலாக அந்த ஒரே இடத்தில் இருந்து கொண்டு எல்லாரையும் பார்க்கலாம். உலகத்தில் இருக்கிற பல நிபுணர்களை அங்கு சந்திக்கலாம். எனவே, அது ஒரு மிகப் பெரிய சந்திப்புக்கான இடம். எனவேதான் எந்த காலத்திலும் நாம் Davos-க்கு போனவுடன் MoU-க்கள் போட்டதில்லை. ஒருவரை சந்தித்து மூன்று மணி நேரத்திற்குள் எல்லாம் MoU போட முடியாது. அவையெல்லாம் போலியான MoU-ஆகதான் இருக்கும். அது எந்தவிதத்திலும் investment ஆக மாறாது. அகையால்தான், சந்திர பாபு நாயுடு, ஆந்திராவின் முதலமைச்சர் அவர்கள் original Davos மாநாடு என்று கூறுகிறார். அவரும் இன்றுவரை அங்கே Davos-ல் MoU-வே போடமாட்டார். ஏனென்றால், அவருக்கு தெரியும் Davos என்றால் என்ன? அங்கு என்ன வரும் என்பதெல்லாம் தெரியும். நீங்கள் சொல்லலாம் மகராஷ்டிரா மாநிலம் MoU போட்டது என்று, மகாராஷ்டிரா மாநிலம் யாருடன் MoU போட்டார்களென்றால், மகாராஷ்டிரா முதலமைச்சர் Davos-க்குப் போகிறார். மும்பையிலிருந்து வருகிற அந்த investment-ஐ இவர் Davos-ல் உட்கார்ந்து காணொலி காட்சிமூலமாக மும்பையிலுள்ள investors-களோடுதான் இவர் கையெழுத்திடுகிறார். இது எந்த விதத்தில் இதை MoU என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்கு மேலும் detail-ஆக போனால் இன்னொரு மாநிலத்தை குறைச்சலாக பேசுவதுபோல் இருக்கும் என்பதால் நாகரிகம் கருதி நான் அதோடு விட்டு விடுகிறேன்.

**ரூ.2.97 இலட்சம் முதலீடுகள்!**

திராவிட நாயகன் அவர்களின் அரசு ஒரு MoU-ல் sign செய்தால், தமிழ்நாடு மட்டும்தான் இந்திய அளவில் எந்தவிதத்திலும் incentive pay செய்யாமல் இருந்ததே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து incentives-ஐ முறையாக செலுத்துகிற ஒரே மாநிலம் திராவிட நாயகன் அவர்களின் தமிழ்நாடு. ஆகையால்தான், ஒரு MoU-ஐ நாம் போட்டால், அந்த MoU மேல் முழுமையான நம்பிக்கை அந்த industries-க்கு இருக்கிறது. ஒரு MoU-ஐ தமிழ்நாட்டினுடன் ஒப்பந்தம் போட்டால் அது ஜப்பான் நாட்டுடன் போட்டதுமாதிரி என்கிற ஒரு நம்பிக்கை தமிழ்நாட்டின் மீதுதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால்தான், தமிழ்நாட்டிற்கு வரும் investors அனைவரும் முதலில் வந்து தட்டும் கதவு நம்முடைய திராவிட நாயகன் அவர்களின் கதவாக இருக்கிறது. அதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். Investors வரும்போது, இந்த investment-னால் யார் யாருக்கு என்னென்ன வளர்ச்சி கிட்டும். எந்தப் பகுதியில் நாம் அடுத்த வளர்ச்சியை தேடிதேடி கொண்டுபோய் சேர்க்கலாம் என்பது பற்றியெல்லாம் நான் detailed-ஆககூட சொல்கிறேன். ஆனால், investments வரும்போது அந்த MoU-ல் ஏன் sign செய்யவில்லை என்றெல்லாம் தயவுசெய்து கேட்காதீர்கள். தேடிதேடி உலகம் எங்கும் சுற்றிக்கொண்டு, அங்கிருந்து investments-ஐ கொண்டுவந்து சேர்த்துக்கொண்டிருக்கிறோம். எனவே, நீங்கள் உங்கள் விமர்சனங்களை வையுங்கள். அதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் அது educated விமர்சனமாக இருக்க வேண்டும். இதனால் தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய அந்த முதலீடுகள் பாதித்துவிடக்கூடாது என்பதுதான் எனது கோரிக்கை. எனவே, இப்படி இரண்டரை வருடங்களில் 2 இலட்சத்து 97 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்தார் நமது திராவிட நாயகன் அவர்கள்.

போல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டவுடன் அவர்களது பணியை நிறுத்தவில்லை. உடனடியாக துறை அமைச்சர் என்ற முறையில் எனது தலைமையில் Chief Secretary அவர்கள் உள்ளிட்ட அனைத்து உயர் அதிகாரிகளையும் இணைத்து ஒரு Committee-ஐ அமைத்தார்கள். தற்போது அந்த Committee-யில் ஒன்றும் நடக்கவில்லையென்று எதிர்க்கட்சி உறுப்பினர் அவர்கள்கூட சொன்னார். Committee-யில் ஒன்றும் நடக்காமலா இவ்வளவு பெரிய conversion rate-ஐ கொண்டுவந்து காண்பித்திருக்கிறோம். அந்த conversion rate-யும் இன்னும் சிறிது நேரத்தில் உங்களுக்கு சொல்கிறேன். இவர்களும், நாங்களும் இரண்டு GIM நடத்தினோம் என்று சொன்னார்கள். நான் அதற்குள் போக வேண்டாம் என்றுதான் இருந்தேன். இதற்குள் போனால் பெரிய விவாதமாகப் போய்விடும். இது எதற்கு இந்த நேரத்தில். சொல்ல வேண்டிய நல்ல விஷயங்கள் இன்னும் நிறைய உள்ளன. ஆனால் எதற்கு அதற்குள் போக வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், உறுப்பினர் அவர்கள், அதை எழுப்பியதால் சொல்கிறேன். GIM 2015 பற்றி சொன்னார்கள். அது மிகவும் குறைவான தொகை. அதனால் நான் அதற்குள் போகவில்லை. அதை விட்டுவிடுகிறேன். GIM 2019 பொறுத்தவரை அதில் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 248 கோடி-Industries Department மட்டும் சொல்கிறேன். மற்றவற்றிற்குள்கூட நான் போகவில்லை. Industries Department மட்டும் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 248 கோடிக்கான MoU-களை அன்றைய அ.தி.மு.க. ஆட்சி இட்டது.

அதன்மூலம் ஒட்டுமொத்தமாக 3 இலட்சத்து 93 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புகள் கிட்டும் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், உண்மையாகச் சொல்கிறேன் திராவிட நாயகன் அவர்களைப் பற்றி உங்களுக்கு புரியும், தெரியும். அவர்களுக்கு எந்தவித காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. யார் போட்ட MoU ஆக இருந்தாலும், அதையும் சேர்த்து நாம்தான் நிச்சயமாக தொடர்ந்து கண்காணித்து அதையும் translate செய்வோம் என்று கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி தொடர்ந்து நாங்கள் translate செய்து conversion-ல் கொண்டு வந்தால்கூட, அவர்கள் போட்ட MoU-லும் நாங்கள் கொண்டு வந்த conversion-ல் போட்டால்கூட 56,250 கோடி ரூபாய் அதாவது 36.23 சதவிகிதம்தான் committed investments இதுவரையில் வந்திருக்கிறது. இது எப்போது உங்களுக்கு தேவையென்றாலும் அந்த detail-ஐ நான் நிச்சயமாகக் கொடுக்கிறேன். To be fair, COVID-ம் வந்தது. இருந்தாலும், அதையும் தாண்டி நாங்கள் அதைத் தொடர்ந்து நாங்கள் கண்காணித்து அதையும் convert செய்து வருகிறோம் என்ற செய்தியை இங்கே தெரிவிக்கிறேன். எனவேதான், GIM 2024

### உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.6.64 இலட்சம் கோடி முதலீடு! முதலீடுகளை ஈர்க்க வெளிநாடு சென்ற முதல்வர்!

GIM 2024 குறித்து நிச்சயமாக சொல்ல வேண்டும். இதைத் தொடர்ந்து 2024 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட, இந்தியாவே வியந்து பார்க்கும் GIM 2024 உலக முதலீட்டாளர்கள் மாநாடுதான் இதுவரை தமிழகம், ஏன் இந்தியாவே காணாத ஒரு பிரம்மாண்டமான மாநாடாக இது அமைந்தது. இதன்மூலம் 6 இலட்சத்து 64 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகளை ஈர்த்தார் திராவிட நாயகன் அவர்கள். மாநாட்டை நடத்தும் போது இது கண்துடைப்பு வேலை. ஒரு முதலீடும் வராது என்று பலரும் ஆருடம் கூறினார்கள். ஆனால், இவர் எப்போதும் முதலமைச்சர் ஆகமுடியாது என்று கூறிய பல அரசியல் ஜோதிடர்களின் முகத்தில் கரியைப் பூசியவர் நமது முதலமைச்சர் அவர்கள் என்பதை இவர்கள் எல்லோரும் மறந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால்தான், ஜனவரி மாதம் 7, 8 ஆம் தேதிகளில் கையெழுத்திடப்பட்ட பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் அடுத்த சில மாதங்களிலேயே படிப்படியாக அடிக்கல் நாட்டு விழாமூலம் முதலீடுகளாக மாறியதையும் இந்த தமிழ்நாடு பார்த்தது. வியந்தது. மற்றவர்களைப் மூலம் நாம் 50 சதவிகிதத்தை எட்டினாலே பெரிய விஷயம் அது. நீங்கள் 50 சதவிகிதம் செய்வீர்களா என்றார்கள். 50 சதவிகிதம் செய்துவிட்டாலே பெரிய விஷயம். பரவாயில்லை. 30 சதவிதம் விஷயம் செய்தால் நல்ல விஷயம். 50 சதவிகிதம் செய்துவிட்டால் பெரிய விஷயம் அதை செய்வீர்களா என்று கேட்டார்கள். ஆனால், அன்றே நிச்சயமாக, 60 சதவிகிதம் செய்வோம் என்று கூறினோம். சென்ற ஆண்டு இதே பேரவையில், முதலமைச்சர் அவர்கள் இருக்கும்பொழுது 50 சதவிகிதம் அல்ல, 60 சதவிகிதத்தையே எட்டிவிட்டோம் என்று நான் கூறினேன். அதை இன்னும் தாண்டி, அவர் போலவே, உங்களுக்கான அறிவிப்பு மிக விரைவில் இருக்கிறது. அந்த 33-ஐ கணக்கு செய்ய கூடாது நீங்கள். 33 காலையிலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

ஒரு உச்சத்தைத் தொட்டவுடன் அமைதியாக உட்காருபவர் அல்ல நமது முதலமைச்சர் அவர்கள்.

தொடர்ச்சி 13–ஆம் பக்கம்